அகநானூற்றில் இயற்கை வெளிப்பாடுகள்

முனைவர் ச. ஸ்டெபி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
போப் கல்லூரி, சாயர்புரம் தூத்துக்குடி மாவட்டம்
DOI: https://doi.org/10.5281/zenodo.19220486

ஆய்வுச் சுருக்கம்

திணையைக் குறிப்பிட நிலம் அடிப்படை ஆகும். குறிஞ்சி நிலமானது புணர்தலுக்குரிய களமாக அங்குள்ள மலைகளும், அருவிகளும் காரணமாகின்றன. இந்நிலத்தில் புலி போன்ற கொடிய விலங்குகள் வாழும் பகுதி வழியாகத் தலைவன் தலைவியைச் சந்திக்க வருகிறான். இயற்கை அழகு வாய்ந்த இந்நிலம் தனிமை நிரம்பியதால் களவு ஒழுக்கத்திற்கு ஏற்ற இடமாகிறது காட்டு நிலமான முல்லை மழையால் இன்பம் துய்க்கும் இடமாக மாறி உயிரினங்களை மகிழ்விக்கிறது வினையின் நிமித்தமாக தலைவியைப் பிரியும் தலைவன் முல்லை நிலத்தின் வழியே செல்லும் போது அவன் காணும் காட்சிகள் அவனை வருத்துகின்றன. வயலால் வளம் பெற்ற மருத நிலம் பரத்தை ஒழுக்கத்தால் ஊடலை ஏற்படுத்து கிறது. மருத நிலப்பாடல்கள் பெரும்பாலும் ஆமை, நண்டு, எருமை,மீன் என அஃறிணை உயிர்களை உள்ளுறைப் படுத்தி தலைவனை வருணிக்கின்றன. கானற் சோலைகள் நிறைந்த நெய்தல் இரங்கல் என்னும். அகவுணர்வை அழகாக எடுத்தியம்புகிறது. குறிஞ்சியும், முல்லையுமாகப் புத்துக் குலுங்கிய சேலைவனம் மழை பொய்த்தமையால் பாலையாக மாறியது. வெப்பம் மிக்க இப்பகுதி பரகற்கள் நிறைந்த கானிலம் ஆகும். ஐந்திணைச் சூழல்களும் அகநானூற்றுப் பாடல்கள் வாயிலாக இயற்கையான முதற்பொருளைச் சார்ந்தே அமைந்துள்ளன, என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

முன்னுரை

மனித ஒழுகலாறுகள் களத்தை ஆதாரமாகக் கொண்டு நிகழ்கின்றன. மனித வாழ்வில் நாடும் வீடும் களமாயின. மனித வாழ்வை அவன் வாழும் சூழல் தீர்மானிக்கிறது. அச்சூழலுக்கு ஏற்பவே மனிதனின் எண்ணங்களும் செயல்பாடுகளும் அமைகின்றன. அகத்திணைப் பாடல்கள் ஒவ்வொன்றும் ஆண், பெண் அகவுணர்வுகளை வெளிப்படுத்துகின்றன. இந்த உணர்வு இயற்கையாகவோ அல்லது தெய்வத்தின் தன்மையாலோ திகழும். வயலால் வளம் பெற்ற மருத நிலம் பரத்தை ஒழுக்கத்தால் ஊடல் ஏற்படுத்துகிறது. கானற் சோலைகள் நிறைந்த இந்நிலங்களில் இயற்கையின் வெளிப்பாடுகள் எவ்விதங்களில் அமைந்துள்ளன என்பதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

ஐந்திணைச் சூழல்

இடமும் காலமும் ஒரு நிகழ்விற்கு முக்கியாக இருந்தாலும் நிலத்திற்கே முதன்மைத் தரப்பட்டுள்ளது. நிலம் என்பதற்கு மா, திணை, வேலி என பிங்கல நிகண்டு விளக்கம் தருகிறது. (பிங்கல நிகண்டு, 1968. ப.89) புணர்தல். இருந்தல், ஊடல், இரங்கல் பிரிதல் ஆகியன எல்லா நிலத்து மக்களிடமும் நிகழும் நிகழ்ச்சிகளே எனினும், மலை நாட்டில் புணர்தல் நிகழ்வதாகக் கூறுவது இலக்கிய மரபு. இவ்வாறே பாலை நிலத்தில் பிரிதலும், முல்லை நிலத்தில் இருத்தலும். மருதத்தில் ஊடலும், நெய்தலில் இரங்கலும் நிகழ்வுகளாகின்றன. காதல் என்பது உயர்திணை மட்டுன்றி அஃறிணை உயிர்களுக்கும் பொதுவான பண்பு ஆகும். இவ்வாறு ஐந்திணைகளும் அகம் என்னும் உள்ளத்தைப் புலப்படுத்துவனாக அமைந்துள்ளதைக் காண முடிகிறது.

குறிஞ்சி நிலச்செழிப்பும் வழிக்கொடுமையும்

ஒவ்வொரு நிலங்களிலும் இயற்கை வளத்திற்கு ஏற்ப தாவர வளர்ச்சியும் மாறுபடுகின்றன. குறிஞ்சி நிலத்தில் வளரக் கூடிய வாழை, பலா, சுரபுன்னை, தேக்கு, சந்தனம், காந்தள், மூங்கில் போனற் மரங்களால் மலை அழகுற காட்சியளிக்கின்றது. அகன்ற மலைகளுக்கருகில் அருவி நீர் பாய்ந்து மலை வளத்தைப் பாதுகாக்கின்றது. இங்கு உதிரக் கூடிய மூங்கில் மலராலும், காந்தளின் நறுமணத்தாலும் மலை நிலம் வாசனைப் பெற்று விளங்குகிறது. இதனைர்,

முந்தூழ் ஆய்மலர் உதிர காந்தள்
நீரு இதழ் நெடுந்துடுப்பு ஒசிய

(அகம்78:8-9)

இப்பாடல் வரிகளால் அறிய முடிகிறது. தலைவியின் மீது அன்பு கொண்ட தலைவன் புலி உள்ள இந்த மலை இடுக்குகளின் வழியாக அனேக நேரங்களில் இவ்வழியினைக் கடந்து தலைவியைக் காண செல்கிறான். இதனை,

"கேழல் அட்ட பேழ்வாய் எற்றை
புலா அமல் அடுக்கம் புலவ ஈர்க்கும்"

(அகம் 8:6-7)

இப்பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றன. தலைவன் கொடிய வழியின் துன்பத்தைப் பொருட்படுத்தாமல் வருவதற்கு அவன் தலைவிமீது கொண்ட அன்பே காரணம் தலைவனுக்கு அரிதாகக் கிடைத்தவள் தலைவி ஆவாள்

நீரால் வளம் பெற்ற முல்லை நிலம்

திசைகள் அனைத்தும் மறையும் படியாக மழை பொழிந்ததால் நிலம் பசுமையானது தேரைகள் கூத்தாடுகின்ற காலத்தில் ஒலிக்கும் பறைஒலி போல இசைத்தன. அரும்புகளுடன் மலர்ந்த பிடவ மலர்கள் செம்மண் நிலத்தில் உதிர்ந்து கோலம் போல காட்சியளித்தன. காந்தன் மலர் விரிந்ததால் அப்பகுதி முழுவதும் மணம் பரவியது. இத்தகைய வளம் பெற்ற காட்டு நிலத்திலே முறுக்கு போன்ற கொம்புடைய ஆண் மான் தன் பெண்மானோடு மகிழ்ந்திருக்கும் தலைவன் தலைவியைக் காண வேண்டிய ஆவலால் செம்மண் நிலத்தில் தேரின் தடம் பதியும் படியாக செல்கின்றான். இதனை.

"காரும் ஆர்கலி தலையின்று தேரும்
ஓவத்து அன்ன கோவச் செந்நிலம்
வள்வாள் அழி உள் உறுப்பு உருள".

(அகம், 54:3-5)

இப்பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன. அது மட்டுமின்றி செவ்வரக்கினைப் போன்ற செந்நிலப் பெருவழி யென்று (அகம்.14: 1-2) என்னும் பாடல் வரிகளில் காண முடிகிறது. இப்படிப்பட்ட செந்நிலம் அகவுணர்வினைத் தூண்டும் களமாக அமைந்துள்ளதைக் காண முடிகிறது. "இலக்கியம் மக்கள் ஒழுக்கத்தையே பொருளாகக் கொண்டது. மக்கள் யாவருக்கும் இயல்பாக அமைந்த காதலுணர்ச்சியும், வீர உணர்ச்சியும் அக்கால இலக்கியங்களில் சிறப்பிக்கப்பட்டன." (வேலுப்பிள்ளை, காலமும் கருத்தும் 2010 ப:18) தலைவி தலைவன் வரவினை எதிர் நோக்கி காத்திருப்பாள். தலைவன் செல்கின்ற வழிகளில் காண்கின்ற காட்சி களும் தலைவியை நினைவு படுத்துகின்றன, என ஆ.வேலுப்பிள்ளைக் கூறுகிறார்.

மருதநிலமும் இயற்கைச் சூழலும்

இயற்கை எழில் நிறைந்த மருத நிலத்தில் வாழும் நண்டு வேறெரு நண்டுடன் சேர்ந்து இன்பம் துய்க்கச் சென்றது. இரை தேடி வந்த நாரையைக் கண்டு அஞ்சிய நண்டு பகன்றைச் செடிக்குள் சென்று பதுங்கியது.

கடல் கண்டன்ன கான் அகன் பரப்பின்
நிலம்பக வீழ்ந்த வோமுதிர் கிழங்கின்

(அகம்-176)

இப்பாடலடிகள் மருத நிலத்தின் வயல் வளத்தையும், அதனைச் சார்ந்த இயற்கைச் சூழலையும் கூறுகின்றன. இந்த நண்டினைப் போன்று தான் தலைவனும் தலைவியைப் பிரிந்து பரத்தையிடம் சென்று இன்பம்

துய்க்கின்றான். "தலைவன் எத்துணைக் கொடுமை செய்யினும் தலைவி கற்பினின்று சிறிதும் நிலை கலங்காப் பெற்றுடையவள்" (சுப்பு ரெட்டியார், ந, அகத்திணைக் கொள்கை. 2017 ப.65) என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். பின்னர் ஊரில் அவர் விழும் எனப் பயந்து தலைவியிடம் வந்து சேருகின்றான். தலைவி அவனிடம் ஊடல் கொண்டாலும்பின்னர்இருவரும்இணக்கம் கொள்கின்றனர். இவ்வாரு இருவரின் அகத்தைப் புலப்படுத்த மருதநிலம் சார்ந்த பின்புலம் உதவுகிறது. மருத நிலக் குளங்களில் வரால் மீன்கள் துள்ளிக் குதிக்கும். இங்குள்ள வயல்களில் தாமரைக மலர்ந்து காணப்படும். இவ்விடத்தில் பறவைகளின் ஒலி கேட்டுக் கொண்டிருக்கும். அது மட்டுமன்றி ஆம்பல் (அகம். 36) காஞ்சி, குவளை (அகம் : 56) (ஞாழல் அகம், 216) போன்ற மலர்களாலும் மருதநிலம் அழகு பெற்றது

மணல் மேடுடைய நெய்தல் நிலம்

நெய்தல் நில மணல் மேடுகளில் சிவந்த காம்புகளையும், கொழுத்த மொட்டு களையுடைய கழிமுள்ளிச் செடிகள் வளர்ந்து காணப்படுகின்றன. குன்றில் தோண்றும் குலவு மணற்சேர்ப்ப (அகம் 310:10) இந்த செடியின் தண்டில் மகரந்தப்பொடிகள் உதிரந்து" படிந்து காணப்படும் "முண்டகம் கெழீஇய மேட்டு மணல் அடைக் கரை" (அகம் 130: 4) என்ற இப்பாடல் வரிகள் மணல் நிறைந்த அடைக்கரையென்று நெய்தல் நிலத்தைக் குறிப்பிடுவதைக் காணலாம். அழகிய குளிர்ந்த முத்துக்கள். நிறைந்ததாக கடற்கரை வழி அமைந்துள்ளது. அங்கு அழகிய நெய்தல் மலர் போன்ற பெண் ஒருவள் நின்று கொண்டிருந்தாள். இதனைத் தேரிலிருந்து கண்ட தலைவன் காதல் கொள்கின்றான் இவ்வாறாக இவர்களது களவு வாழ்வு தொடங்குகிறது. தலைவன் தலைவியைக் காண பகல் மற்றும் இரவு வேளைகளில் வர இவர்களது களவு வாழ்வு நீடிக்கிறது. இயற்கைப் புணர்ச்சியின் வாயிலாகக் காதல் கொண்ட தலைமக்களின் மனநிலை மனநிலை இப்பாடலில் பதிவு பெற்றுள்ளது.

வெப்பம் மிக்கப் பாலை

பாலை நிலம் நிழலுக்கு மரமோ, தாகத்திற்கு நீரோ கிடைக்காத வெப்பம் மிக்க பகுதி. "சின்னாட் செயற்கைச் கொடுஞ் சுரத்தைக் காதலோர்தம் அன்பின் நிலைக்களமாக்கினர்" வறண்ட பாலைத் தடத்தை அன்புநீர் சுரக்கும் ஆயிர உள்ளங்களின் பிரிவுப் பாடல்களுக்குக் கற்பனைச் செய்து ஆக்கினர். தமிழ்ப் புலனோர் உழவர்கள் (மாணிக்கனார், வ.சு.ப தமிழ்க் காதல், 2014, ப:148) என்கிறார் ஆசிரியர். இந்த வெப்பம் மிக்கப் பகுதியைத் தலைவனும் தலைவியும் காதல் ஒழுக்கத்தால் சிறப்பானதாக மாற்றினர்.

"அழல் போல் வெங்கதிர் பைது அறத்தெறுதலின்
நிழல் தேய்ந்து உலறிய மரத்த அறை காய்பு
அறுநீர்ப் பைஞ்சுனை ஆம்அறப் புலர்தலின்
உடுநெல் பொரியும் வெம்மை, யாவரும்"
(அகம் :15-4)

இப்பாடல் வரியானது, வெப்பம் மிக்க பாலை நிலத்தில் பசுமையான நெல்லினைச் சொரிந்தால், அவை பொரியாகப் பொரிந்து விடும் அளவிற்கு கொடுமையானதாக காணப்பட்டதை அறிய முடிகிறது." கோடைக் காலத்தில் எங்கும் வெப்பம் பொறுக்க முடியாத நடுப்பகலில் மரங்களெல்லாம், காய்ந்து கரிந்து நிற்கும் வெஞ்சுரம், மழையே இல்லாத கொடிய நிலம் குடிநீர் என்பது அங்குக் குதிரைக் கொம்பு" (சுப்புரெட்டியார்த. அகத்திணைக் கொள்கை, 2017, ப.34) என்று கூறுவது குறிப்பிடத்தக்கது இத்தகைய வெப்பம் நிறைந்த பாலை நிலமும் மனிதனின் அகவுணர்களை எடுத்தியம்புகின்றன.

நிறைவுரை

குறிஞ்சிநிலமானதுபுணர்தலுக்குரிய களமாக அங்குள்ள மலைகளும், அருவிகளும் காரணமாகின்றன. இயற்கை அழகு வாய்ந்த இந்நிலம் தனிமை நிரம்பியதால் களவு ஒழுக்கத்திற்கு ஏற்ற இடமாகிறது. காட்டு நிலமான முல்லை மழையால் இன்பம் துய்க்கும் இடமாக மாறி உயிரினங்களை மகிழ்விக்கின்றது. வயலால் வளம் பெற்ற மருத நிலம் பரத்தை ஒழுக்கத்தால் ஊடலை ஏற்ப்படுத்துகிறது. கானற் சோலைகள் நிறைந்த நெய்தல் இரங்கல் என்னும் அகவுணர்வை அழகாக எடுத்தியம்புகிறது பாலையில் நீரும், நிழலும் இன்மையால் உயிரினங்கள் வாழத் தகுதியற்ற சூழல் நிலவுகிறது. இவ்வாறு நிலங்கள் அகமாந்தரின் அகவுணர்வைப் புலப்படுத்துவதோடு, இயற்கையையும் வெளிப்படுத்துகின்றன என்பது இக்கட்டுரையின் வாயிலாக புலனாகிறது.

துணைநூற் பட்டியல்,

1. சுப்பு ரெட்டியார், ந : அகத்திணைக் கொள்கை, பத்மாவதி பதிப்பகம். சென்னை.
2. சோம சுந்தரனார், பொ.வே : அகநானூறு உரைபாயிரம், 1979 - சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை.
3. மாணிக்கனார், வ.சு.ப : தமிழ்க்காதல் 2014- சுரதாபதிப்பகம் இராயப்பேட்டை,சென்னை.
4. பிங்கல முனிவர்: பிங்கல. நிகண்டு 1968 - தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் திருநெல்வேலி
5. வேலுப்பிள்ளை, ஆ: தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்.2004 - குமரன் பதிப்பகம் வடபழனி, சென்னை.